# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1847/32 - 2014 ජනවාරි මස 29 වැනි බදාදා - 2014.01.29

*1847/32 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 24/51* (vi)

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 3 ஆம் மற்றும் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

குமார வெல்கம,
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
2014, சனவரி 21.

ஒழுங்குவிதிகள்

1. 1983 ஆம் ஆண்டு யூன் மாதம் 3 ஆந் திகதிய 248 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் வெளியிடப்பட்டவையும், காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறானவையும் மற்றும் 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் 11 ஆந் திகதிய 1805/34 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதியினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானவையுமான 1983 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன (வாகனங்கள் நிர்மாண) ஒழுங்குவிதிகள், அதன் 2 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன:-

"2. (1) ஏதேனும் மோட்டார் வாகனத்தின் பரிமாணங்கள், இதன் கீழ் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட வகுப்பினவான அல்லது விவரணத்தினவான மோட்டார் வாகனங்கள் தொடர்பில் நிரல் II இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட பரிமாணங்களை விஞ்சுதலாகாது :-

**நீளமும், அகலமும், உயரமும்**

| | நிரல் I<br>மோட்டார் வாகனங்களின் வகுப்பு அல்லது விவரணம் | நிரல் II<br>மில்லி மீற்றர்களில் (மி. மீ.) |
|---|---|---|
| (அ) | (ஒரு மோட்டார்க் கோச்சுத் தவிர) மோட்டார் வாகனத்தின் ஒட்டுமொத்த அகலம் | 2,500 |
| (ஆ) | மோட்டார்க் கோச்சின் ஒட்டுமொத்த அகலம் | 2,600 |
| (இ) | (ஓர் இரட்டைத்தட்டு மோட்டார் கோச்சுத் தவிர) மோட்டார் வாகனத்தின் உயரம் | 3,800 |
| (ஈ) | ஓர் இரட்டைத் தட்டு மோட்டார்க் கோச்சின் உயரம் | 4,600 |
| (உ) | ஒரு மோட்டார்க் கோச்சுத் தவிர, இரு அச்சுக்களுடனான மோட்டார் வானத்தின் ஒட்டு மொத்த நீளம் | 10,000 |
| (ஊ) | இரு அச்சுகளுக்கு மேற்பட்டவற்றுடனான மோட்டார் வாகனத்தின் ஒட்டு மொத்த நீளம் | 11,000 |
| (எ) | (ஒரு பாரமான மோட்டார்க் கோச்சுத் தவிர) மோட்டார்க் கோச்சின் ஒட்டு மொத்த நீளம் | 12,000 |
| (ஏ) | ஒரு தொகுக்கப்பட்ட வாகனத்தின் ஒட்டு மொத்த நீளம் | 16,000 |
| (ஐ) | ஓர் இழுவைப் பொறியுடனான இணைக்கப்பட்ட வானத்தின் ஒட்டு மொத்த நீளம் | 17,000 |
| (ஒ) | ஒரு பாரமான மோட்டார்க் கோச்சின் ஒட்டு மொத்த நீளம் | 24,000 |

(2) ஏதேனும் மோட்டார் வாகனத்தின் உயரம், அகலத்தின் நூற்றியறுபத்தைந்து சதவீதத்தை (165%)விஞ்சுதலாகாது.

(3) (அ) ஏதேனும் மோட்டார் வானத்தின் அச்சுத் சுமை, நிரல் I இலுள்ள பதிவில் குறித்துரைக்கப்பட்ட வகுப்பினவான அல்லது விவரணத்தினவான மோட்டார் வாகனங்கள் தொடர்பில் நிரல் II இல் அதன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட அச்சுச் சுமையை விஞ்சுதலாகாது :-

**வாகனமொன்றின் அச்சுத் சுமை**

| | நிரல் I<br>மோட்டார் வாகனங்களின் வகுப்பு அல்லது விவரணம் | நிரல் II<br>கிலோ கிராம்கள் (கி. கி.) |
|---|---|---|
| (i) | இரு சில்லுகளைக் கொண்ட தனி அச்சு | 6,000 |
| (ii) | நான்கு சில்லுகளைக் கொண்ட தனி அச்சு | 10,000 |
| (iii) | நான்கு சில்லுகளைக் கொண்ட இரட்டை அச்சு | 10,000 |
| (iv) | அச்சின் மத்திகளுக்கிடையேயான இடைவெளி 2.45 மீற்றர்களுக்கு மேற்படாதனவாக இருக்குமிடத்து, எட்டுச் சில்லுகளைக் கொண்ட இரட்டை அச்சு அல்லது 8 சில்லுகளுடனான எவையேனும் இரண்டு தொடர்ச்சியான அச்சுகள் | 16,500 |
| (v) | புறக்கோடி அச்சுகளின் மத்திகளுக்கிடையேயான இடைவெளிகள் 3.66 மீற்றர்களுக்கு மேற்படாதனவாகவிருக்குமிடத்து, பன்னிரெண்டு சில்லுகளைக் கொண்ட மூன்று அச்சுகள் அல்லது 12 சில்லுகளுடனான எவையேனும் மூன்று தொடர்ச்சியான அச்சுகள் | 22,000 |

(ஆ) ஏதேனும் மோட்டார் வானத்தின் முழு மொத்த வாகன எடை, நிரல் I இலுள்ள பதிவில் குறித்துரைக்கப்பட்ட வகுப்பினவான அல்லது விவரணத்தினவான மோட்டார் வாகனங்கள் தொடர்பில் இதன் கீழ் நிரல் II இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட முழு மொத்த வாகன எடையை விஞ்சுதலாகாது :-

முழு மொத்த வாகன எடை

| | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| | மோட்டார் வாகனங்களின் வகுப்பு அல்லது விவரணம் | கிலோ கிராம்கள் (கி. கி.) |
| (i) | நான்கு சில்லுகளைக் கொண்ட பின்புற அச்சுடனான வாகனம் | 15,275 |
| (ii) | எட்டுச் சில்லுகளைக் கொண்ட பின்புற அச்சுடனான வாகனம் | 21,300 |
| (iii) | ஓட்டுதற் கூறுக்கான இரண்டு சில்லுகளைக்கொண்ட முன்புற அச்சுடனும், மற்றும் இரண்டு சில்லுகளைக் கொண்ட பின்புற அச்சுடனும்இழுவைப் பொறிக்கான 4 சில்லுகளைக் கொண்ட அச்சுடனும் தொகுக்கப்பட்ட அல்லது இணைக்கப் பட்ட வாகனம் | 19,900 |
| (iv) | ஓட்டுதற் கூறுக்கான இரண்டு சில்லுகளைக் கொண்ட முன்புற அச்சுடனும் மற்றும் நான்கு சில்லுகளைக் கொண்ட பின்புற அச்சுடனும், இழுவைப் பொறிக் கான 4 சில்லுகளைக் கொண்ட அச்சுடன் தொகுக்கப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட வாகனம் | 23,500 |
| (v) | ஓட்டுதற் கூறுக்கான இரண்டு சில்லுகளைக் கொண்ட முன்புற அச்சுடனும் மற்றும் நான்கு சில்லுகளைக் கொண்ட பின்புற அச்சுடனும், இழுவைப் பொறிக்கான 8 சில்லுகளைக் கொண்ட இரட்டை அச்சுடனும் தொகுக்கப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட வாகனம் | 29,800 |
| (vi) | ஓட்டுதற் கூறுக்கான இரண்டு சில்லுகளைக் கொண்ட முன்புற அச்சுடனும் மற்றும் எட்டுச் சில்லுகளைக் கொண்ட பின்புற இரட்டை அச்சுடனும், இழுவைப் பொறிக்கான நான்கு சில்லுகளைக் கொண்ட அச்சுடனும் தொகுக்கப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட வாகனம் | 30,400 |
| (vii) | ஓட்டுதற் கூறுக்கான இரண்டு சில்லுகளைக் கொண்ட முன்புற அச்சுடனும் மற்றும் நான்கு சில்லுகளைக் கொண்ட பின்புற அச்சுடனும், இழுவைப் பொறிக்கான 12 சில்லுகளைக் கொண்ட மூன்று அச்சுக்களுடனும் தொகுக்கப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட வாகனம் | 33,900 |
| (viii) | ஓட்டுதற் கூறுக்கான இரண்டு சில்லுகளைக் கொண்ட முன்புற அச்சுடனும் மற்றும் எட்டுச் சில்லுகளைக் கொண்ட பின்புற இரட்டை அச்சுடனும். இழுவைப் பொறிக்கான 8 சில்லு களையுடைய இரட்டை அச்சுக்களுடனும் தொகுக்கப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட வாகனம் | 36,700 |
| (ix) | ஓட்டுதற் கூறுக்கான இரண்டு சில்லுகளைக் கொண்ட முன்புற அச்சுடனும் மற்றும் நான்கு சில்லுகளைக் கொண்ட பின்புற இரட்டை அச்சுடனும், இழுவைப் பொறிக்கான 12 சில்லு களைக் கொண்ட மூன்று அச்சுக்களுடனும் தொகுக்கப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட வாகனம். | 31,200 |
| (x) | ஓட்டுதற் கூறுக்கான இரண்டு சில்லுகளைக் கொண்ட முன்புற அச்சுடனும் மற்றும் எட்டுச் சில்லுகளைக் கொண்ட பின்புற இரட்டை அச்சுடனும், இழுவைப் பொறிக்கான 12 சில்லு களைக் கொண்ட மூன்று அச்சுக்களுடனும் தொகுக்கப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட வாகனம். | 42,500" |

2. 2005, பெப்புருவரி 16 ஆந் திகதிய 1380/14 ஆம் இலக்க மற்றும் 2011, ஒற்றோபர் 5 ஆந் திகதிய 1726/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

2- 309

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.